[2020 மார்ச் 20

7,500 MLD வழங்கப்படுகிறது. கிட்டத்தட்ட 2,500 MLD–க்குமேல் தினமும் வழங்கக்கூடிய குடிநீர் அளவு அதிகமாகியிருக்கிறது. இந்தியாவிலே அதிகமாகக் குடிநீர் வழங்குவதில் தமிழ்நாடு Number One ஆகத் திகழ்கிறது. இந்த மாதிரி பல்வேறு சாதனைகளைச் செய்திருக்கிறது. இருந்தாலுங்கூட, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் குறிப்பிட்ட பகுதிகளில் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 140, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

140—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***53262—திரு. ப. பலராமன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதியில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதியில், பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன் அவர்கள்.

திரு. ப. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், கழகத்தின் காவல் தெய்வம், என்னை ஆளாக்கிய பொன்மாதா, புனிதத் தாய், அம்மா அவர்களை

வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் திருவள்ளூர் மாவட்டம் எனது பொன்னேரி தொகுதியில் 21 ஆயிரத்து 966 ஏக்கர் பரப்பளவில் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் கொண்டு வந்த குடிமராமத்து நாயகர், கேட்டவருக்குக் கேட்டதெல்லாம் கொடுத்து வரும் கலியுகக் கர்ணர், (மேசையைத் தட்டும் ஒலி) காவேரித் தாயின் பாதுகாவலர், (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாம் கரிகால் சோழர், தவசித்தாயின் தவப் புதல்வர், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். முதலமைச்சருக்கு உற்ற துணையாக, தென்பாண்டி நாட்டின் சிங்கமாக, ஜல்லிக்கட்டு நாயகராக, பொறுமையின் சிகரமாக இருக்கும் மேன்மைக்குரிய அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

முற்பகல் 10–30

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பொன்னேரி தொகுதிக்கு பல்வேறு நலத் திட்டங்களையும், வளர்ச்சித் திட்டங்களையும் வாரி வழங்கியுள்ள அம்மாவின் அரசு, நான் கல்வி பயின்ற, இருபாலரும் படித்து வருகின்ற பொன்னேரி அரசினர் உலகநாத நாராயணசாமி கலைக் கல்லூரியைப் பிரித்து, தனியாகப் பெண்கள் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றை உருவாக்க வேண்டுமென்பது அப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கை ஆகும். இந்தக் கல்லூரியின் கட்டமைப்பு வசதிக்காக 10 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்வதுடன், அருள்கூர்ந்து இந்தக் கலைக் கல்லூரியைப் பிரித்து, மகளிருக்கான தனி கல்லூரியை அம்மாவின் அரசு உருவாக்கித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல, பொன்னேரியிலே உலகநாத நாராயணசாமி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியானது 1965 ஆம் ஆண்டு

ஆரம்பிக்கப்பட்ட பழமை வாய்ந்த கல்லூரி. அதோடுகூட, இன்னும் ஓர் அரசு கல்லூரியும் இருக்கிறது. பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரியும் இருக்கிறது. அரசு நிதியுதவி பெறக்கூடிய கல்லூரி ஒன்றும் அந்த மாவட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. அந்தவகையிலே, அரசு கல்லூரி, அரசினுடைய பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரியாக இருந்து அரசு கல்லூரியாக மாற்றப்பட்ட கல்லூரி, இந்த மூன்று கல்லூரிகளிலுமே ஒப்பளிக்கப்பட்ட இடங்களிலே பார்க்கின்றபோது, இன்றைக்கு 171 இடங்கள் காலியாக இருக்கின்றன. அதேபோல, அரசு நிதியுதவி பெறக்கூடிய கல்லூரியிலே 50 இடங்கள் காலியாக இருக்கின்றன. இன்றைக்கு 31 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அந்த மாவட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றில் 6,606 இடங்கள் காலியாக இருக்கின்றன. இருந்தாலும், அவர் பொன்னேரி பகுதியிலே மாணவிகளின் சேர்க்கை அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அங்கே கூடுதலாக மகளிருக்கென்று தனியாக ஒரு கல்லூரியைக் கேட்கின்றார். அந்த இடத்தில் புதிதாகக் கல்லூரியைத் தோற்றுவிப்பதற்குப் பதிலாக, அங்கே 2011 ஆம் ஆண்டுக்கு பின்பாகக் கூடுதல் பாடப் பிரிவுகளையெல்லாம் உருவாக்கி, அதன் மூலமாக மாணவர்களுடைய சேர்க்கையை முழுமையாகப் பெற வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் பொன்னேரி உலகநாத நாராயணசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலே இளநிலைப் படிப்பில் 5 பாடப் பிரிவுகளும், முதுநிலைப் படிப்பில் 6 பாடப் பிரிவுகளும், M.Phil.–ல் 3 பாடப் பிரிவுகளும், Ph.D.–ல் இரண்டு பிரிவுகளும் என்று விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே, அந்தப் பகுதியிலே இருக்கின்ற அனைத்து மாணவர்களும் உயர் கல்வி பெறும் வகையிலேதான் வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதோடுமட்டுமல்லாமல், இன்றைக்கு அந்தக் கல்லூரிக்குக் கட்டமைப்பு வசதிகள் தேவை என்பதைக் கருத்தில்கொண்டு, பழமை வாய்ந்த அந்தக் கல்லூரியின் கட்டடங்களைப் புதுப்பிப்பதற்காக 1 கோடியே 34 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, அந்தப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

மேலும், அவர் குறிப்பிட்டதுபோல, இன்றைக்கு பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா கட்டடங்கள் என்ற பெயரில் ஏற்கெனவே அந்தக் கல்லூரிக்காக 10 வகுப்பறைகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதோடுமட்டுமல்லாமல், இரண்டு ஆய்வகங்கள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக, 3 கோடியே 22 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு

செய்யப்பட்டிருக்கிறது. ஆக, அந்த இடத்திலே இருக்கின்ற மாணாக்கர்களுடைய சேர்க்கைக்குத் தகுந்தாற்போல் வசதிகள் உள்ளன. இன்றைக்கு மேலும் புதிதாக 10 கல்லூரிகளைத் தொடங்க 54 கோடி ரூபாயை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஒதுக்கித் தந்துள்ளார்கள். இன்றைக்கு ஒட்டுமொத்தமாக 36 வகுப்பறைகளும், 8 ஆய்வகங்களும் கட்டுகின்ற வகையிலே, 11 கோடியே 15 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தேவையான தளவாடச் சாமான்கள் வாங்குவதற்காகவும் நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, மாணாக்கர்களுடைய சேர்க்கைக்குத் தகுந்தாற்போல் புதிய பாடப் பிரிவுகள், புதிய கட்டடங்கள் எல்லாம் அங்கே வழங்கியிருக்கின்ற காரணத்தினால் எதிர்வரும் காலங்களிலே மாணாக்கர்கள் சேர்க்கைக்கு உகந்ததாக அந்தக் கல்லூரி அமைந்திருக்கிறது. எனவே, புதிதாக மகளிருக்கென்று தனியாக ஒரு கல்லூரி அங்கே எழுவதற்கான வாய்ப்பு இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன் அவர்கள்.

திரு. ப. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஆண்டில் 11 மருத்துவக் கல்லூரிகளை வழங்கி, இந்தியாவில் தமிழகம்தான் மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கையில் முதன்மை மாநிலம் என்று பெருமை சேர்த்தவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, 234 தொகுதிகளில் ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கல்லூரியில் சுமார் 5,500 மாணவ, மாணவிகள் படித்து வருகின்றார்கள். இதில், மாணவிகள் மட்டுமே சுமார் 3,000 பேர் படித்து வருகின்றார்கள். என்னுடைய பொன்னேரி தொகுதி மட்டுமல்லாது, மாதவரம், கும்மிடிப்பூண்டி, திருவொற்றியூர் போன்ற பல்வேறு பகுதிகளிலிருந்து மாணவிகள் வந்து இந்தக் கல்லூரியில் படித்து வருகின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பிறந்த நாளை 'மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு தினமாக' அறிவித்து, அதை பிரம்மாண்டமாகக் கொண்டாடிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார்

அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதுடன், அந்தப் பெண் குழந்தைகளின் விருப்பத்திற்கிணங்க, இந்தக் கல்லூரியைப் பிரித்து, தனியாக மகளிர் கல்லூரியை அமைத்திட வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

மேலும், இந்தக் கல்லூரி வளாகத்தில் சுமார் 30 ஏக்கர் அளவிற்கு இட வசதியுள்ளது. கட்டடங்கள் உள்ளிட்ட அடிப்படை கட்டமைப்புகளை உருவாக்க பல்வேறு தனியார் நிறுவனங்கள் நிதியுதவி செய்ய முன்வந்திருக்கின்றன. இந்தக் கல்லூரியின் விழாக்களுக்கு நான் செல்லும்போதெல்லாம் நூற்றுக்கணக்கான மாணவிகள் என்னைச் சூழ்ந்துகொண்டு, 'நீங்கள், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களிடத்திலும், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் கோரிக்கை வைத்தால், நிச்சயம் அவர்கள் நிறைவேற்றுவார்கள்' என்று தெரிவிக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, பரிசீலனை செய்து, இந்த ஆண்டே அதற்குரிய அறிவிப்பை வெளியிட்டு, அதற்கான பணிகளைத் தொடங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அது பொன்னேரி தொகுதி மக்களின் நலனுக்காகவும், முன்னேற்றத்திற்காகவும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. பலராமன், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. ப. பலராமன்: பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் (Polytechnic) தமிழ் வழியில் படிக்கும் மாணவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்து, உயர் கல்வியிலே புரட்சியை ஏற்படுத்திய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற பின்பு, இரண்டு இடங்களிலே மகளிருக்கென தனியாக கலை மற்றும்

2020 மார்ச் 20]

அறிவியல் கல்லூரிகளைத் தோற்றுவித்தார்கள். அதே வழியில் தமிழகத்தில் நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் விழுப்புரத்திலே டாக்டர் எம்.ஜி.ஆர். அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தோற்றுவித்தார்கள்.

அதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு திருநெல்வேலி மாவட்டத்தைப் பிரித்து தென்காசியை புதிய மாவட்டமாக உருவாக்கி, ஆலங்குளத்தில் அரசு மகளிர் மற்றும் கலை அறிவியல் கல்லூரி ஒன்றையும் தோற்றுவிக்க இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் பார்வைக்கு எடுத்துச் சென்று, அரசானது பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.

டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் நெல்லை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, தென்காசி தனி வருவாய் மாவட்டமாக அறிவிக்கப்பட்ட அந்த நிகழ்ச்சியின்போது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆலங்குளம் தொகுதிக்கு ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை வழங்குவதாகக் கூறினார்கள். தற்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதை இங்கே வலியுறுத்தினார்கள். என்னுடைய கோரிக்கையானது, அதை கலை மற்றும் அறிவியல் கல்லூரியாக இல்லாமல்-pure science-ஓர் அறிவியல் கல்லூரியாக அமைத்துத் தர வேண்டும். ஏனென்றால், இன்றைக்கு, Physics, Chemistry, Zoology, Botany, Genetics (மரபணுத் துறை), Biochemistry, Biophysics போன்ற பாடங்களையே மாணவர்கள் அதிகமாகப் படிக்க வேண்டுமென்று விரும்புகின்றார்கள். Demand is more. Pure science படிக்கின்ற demand அதிகரித்துக் கொண்டு வருவதால், தயவுசெய்து, அவர்களுடைய எண்ணங்களுக்கு ஏற்றவாறு, இதை ஒரு pure science கல்லூரியாக அறிவிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், இந்தக் கல்லூரியை அமைப்பதற்கு ஆலடி அருணா அறக்கட்டளை வாயிலாக நாங்கள் இலவசமாக இடம் வழங்கத் தயாராக இருக்கின்றோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், எங்கள்

[2020 மார்ச் 20

ஆலங்குளம் தொகுதியிலுள்ள வணிக சமுதாய மக்கள் நீங்கள் இந்தக் கல்லூரியை pure science கல்லூரியாக அறிவித்தால், அதன் கட்டமைப்புக்கான உதவியையும், நிதியுதவியையும் வழங்கிடத் தயாராக இருக்கின்றார்கள். எனவே, ஆலங்குளம் தொகுதியில், ஆலங்குளம் பேரூராட்சியில் இந்தக் கல்லூரியை அமைத்திட வேண்டும். அதை pure science கல்லூரியாக அமைத்திட வேண்டுமென்பதற்குத் தங்கள் வாயிலாகக் கோரிக்கை வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய திருநெல்வேலி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஆலங்குளத்திலே ஒரு கல்லூரியை அறிவித்ததோடு மட்டுமல்லாமல், சங்கரன்கோவிலிலும் ஒரு கல்லூரியை அறிவித்திருக்கின்றார்கள். அந்த ஒரே மாவட்டத்தில், ஒரே நேரத்தில் இரண்டு கல்லூரிகளை வழங்கிய பெருமை இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையே சாரும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் pure science கல்லூரியாக அங்கு பாடப் பிரிவுகளைக் கொண்டுவர வேண்டுமென்று நினைக்கின்றார்கள். கிராமப் பகுதிகளில் இருக்கின்ற மாணவர்கள் அனைவருக்குமே, அவர்கள் விரும்புகின்ற பாடப் பிரிவுகளைக் கொடுக்க வேண்டுமென்பதுதான் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய குறிக்கோள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலேதான் வரலாறு காணாத அளவுக்கு 2011–லே ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதற்கொண்டு இன்றுவரை பார்த்தோமென்றால், 1,666 புதிய பாடப் பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. 2006 முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான ஆட்சிக் காலத்தில் பார்த்தோமென்றால், 101 பாடப் பிரிவுகள் மட்டும்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, கிராமப்புறங்களில் இருக்கக்கூடியவர்கள் pure science–ஐ விரும்புகிறார்களென்றால், அதற்குண்டான பாடப் பிரிவுகளையும் அரசு வழங்குவதற்குத் தயாராக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த கலை மற்றும் அறிவியல் கல்லூரி

அனைத்து பாடப் பிரிவுகளோடு, தற்போது முதற்கட்டமாக 5 பாடப் பிரிவுகளோடு தொடங்கப்படும். அதன் தொடர்ச்சியாக விரும்புகின்ற பாடப்பிரிவுகளைமாண்புமிகு முதலமைச்சர்அவர்கள்வழங்குவதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடைக்கோடி கிராமங்களில் இருக்கின்ற மாணாக்கர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கிற அரசாக, அம்மா அவர்களுடைய அரசு இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பாக என்னுடைய திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதியிலே அதிலும் குறிப்பாக, பூண்டி ஒன்றியத்திலே அரசு கலைக் கல்லூரி வேண்டுமென்று கேட்டிருந்தேன். அதற்கு வாய்ப்பில்லை என்ற பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்போது எனக்குத் தந்தார். ஆனாலும், மறுபடியும் அந்த கோரிக்கையை முன்வைக்க விரும்புகிறேன். இன்றைக்கு திருவள்ளூரில் வசிக்கும் அதிகமான தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் கல்லூரி படிப்பிற்காக சென்னைக்கு அருகே உள்ள கலைக் கல்லூரிகளுக்குச் செல்வதால், அவர்கள் நீண்ட தூரம் பயணம் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அதனால், அங்கு ஒரு கலைக் கல்லூரியை அமைத்துத் தர அரசு முன்வர வேண்டும். அங்கே இடமும் இருக்கிறது. பூண்டி ஒன்றியத்தில் TANSI land காலியாக இருக்கிறது. அதை நீங்கள் எடுத்து, அங்கே அரசு கலைக் கல்லூரியை அமைத்தால் அந்தப் பகுதி மக்களுக்கும், மாணவர்களுக்கும் உதவியாக இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசானது இன்றைக்கு மாணாக்கர்களுடைய

சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் எந்தெந்தப் பகுதிகளிலே கூடுதலாக வருகின்றனவோ, அந்தப் பகுதிகளில் ஆய்வினை மேற்கொண்டு, தேவைப்படுவதன் அடிப்படையிலேதான் புதிய கல்லூரிகளைத் தொடங்குகின்றது. புதிதாக ஒரு பாடப் பிரிவு தொடங்கினால், அந்த இடத்திலே இருக்கின்ற மாணாக்கர்களின் விண்ணப்பங்கள் பூர்த்தியாவதைக் கருத்தில்கொண்டு, ஒரு சில இடங்களிலே தேவைக்கேற்ப, பாடப் பிரிவுகளை வழங்கிக் கொண்டிருக்கின்றோம். அந்த வகையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற இடத்தில், மாணாக்கர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் அருகிலே இருக்கக்கூடிய கல்லூரிகளிலே அதிகமாகப் பெறப்படுகின்றன என்றால், அதுகுறித்து எதிர்வரும் காலங்களில் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 141, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

141—

நவீன அரிசி ஆலை

***52076—திரு. சு. ரவி:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, பள்ளூர் கிராமத்தில் நவீன அரிசி ஆலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, பள்ளூர் கிராமத்தில் நவீன அரிசி ஆலை அமைப்பதற்குத் தகுதியான இடம் கிடைக்கும்பட்சத்தில், தேவைக்கேற்ப நவீன அரிசி ஆலை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதனை மாண்புமிகு பேரவைத்